தினமலர்
18.08.2022.


MAHALAKSHMI
HOTEL MANAGEMENT & CATERING TECHNOLOGY
Approved by ALAGAPPA UNIVERCITY & Regcognised by DET Govt. of Tamilnadu
48, Shanmugam Street, Manjakuppam, Cuddalore -1
COURSES
B.Sc | 3 Years
DIPLOMA | 3 Years
2 Years DIPLOMA
1 Year Courses
+2 PASS / SSLC PASS / FAIL
அட்மிஷன் நடைபெறுகிறது
CALL : 95851 06168, 95666 57602



தினமலர்
www.dinamalar.com
www.facebook.com/Dinamalardaily

# கடலூர்

நமது ஊர் செய்திகளை தரும் நம்பர் 1 நாளிதழ்

புதுச்சேரி ● வியாழன் ● ஆகஸ்ட் 18, 2022


**செய்தி சாரல்** விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிக்கு, நேற்று 6,262 மூட்டை வேளாண் விளைபொருட்கள் விற்பனைக்கு வந்தன.

அதிகபட்சம் 34°C, குறைந்தபட்சம் 26°C. வானம் தெளிவாக காணப்படும்.

## ரூ.25.70 லட்சத்தில் புதுப்பிக்கப்பட்ட இறகு பந்து விளையாட்டரங்கம் திறப்பு

**கடலூர், ஆக. 18–**

கடலூர் அண்ணா விளையாட்டரங்கில் ரூ. 25.70 லட்சத்தில் புதுப்பிக்கப்பட்ட இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம் திறப்பு விழா நடந்தது.

கடலூர் அண்ணா விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டிருந்த இறகுபந்து உள் விளையாட்டு அரங்கில், மரத்தாலான ஆடுகளங்கள் பாதிக்கப்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தது. தற்போது விளையாட்டு வீரர்கள் மற்றும் மாணவர்கள் இறகுப்பந்து விளையாடுவதற்கு ஏதுவாகவும், மழைநீரால் பாதிப்பு ஏற்படாத வகையில் முதற்கட்டமாக ஆடுகளத்தை 3 அடி உயர்த்தி அடித்தளம் அமைக்க, தன்னிறைவுத் திட்டத்தில், கடலூர் இறகுபந்துக் கழகம் பங்களிப்பு 5.60 லட்சம் ரூபாய் செலவில் அடித்தளம் உயர்த்தும் பணி முடிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக மரத்தாலான 3 ஆடுகளம் அமைக்க தன்னிறைவுத் திட்டத்தில் கடலூர் சிப்காட் வளாகத்தில் உள்ள கிரிம்சன் ஆர்கானிக் நிறுவனத்தின் பங்களிப்பு 20.10 லட்சம் ரூபாய் செலவில் மரத்தாலான ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட இறகு பந்து உள் விளையாட்டரங்கை கலெக்டர் பாலசுப்ரமணியம் நேற்று திறந்து வைத்தார்.

விழாவில் அய்யப்பன் எம்.எல்.ஏ., மேயர் சுந்தரி, எஸ்.பி., சக்திகணேசன், கூடுதல் கலெக்டர் பவன் குமார் கிரியப்பனவர், துணை மேயர் தாமரைச் செல்வன், கிரிம்சன் ஆர்கானிக் நிறுவன மேலாண் இயக்குநர் ரமேஷ் பிரபாகரன், கடலூர் மாவட்ட இறகு பந்து நலக்கழக நிர்வாகிகள் ஜெயச்சந்திரன், ஓம்பிரகாஷ் மற்றும் விளையாட்டு அலுவலர், பயிற்சியாளர்கள், மாணவ மாணவியர் பங்கேற்றனர்.



கடலூர் அண்ணா விளையாட்டரங்கில் புதுப்பிக்கப்பட்ட இறகு பந்து உள் விளையாட்டரங்கை, கலெக்டர் பாலசுப்ரமணியம் திறந்து வைத்தார். அருகில் அய்யப்பன் எம்.எல்.ஏ., மேயர் சுந்தரி.